**செ.வெ.எண்: 35 / மார்ச் /2020** **நாள்: 12.03.2020**

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஆண்களுக்கான நவீன குடும்பநல கருத்தடை சிகிச்சை சிறப்பு முகாம் வருகின்ற 19.03.2020 அன்று அரசு மருத்துவமனை, திருவெறும்பூர் - துவாக்குடி மற்றும் BHEL மருத்துவமனையில் நடைபெறவுள்ளது.**

------------

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஆண்களுக்கான நவீன குடும்பநல கருத்தடை சிகிச்சை சிறப்பு முகாம் நடைபெறுகிறது. இதில் பங்கு பெறும் ஆண்களுக்கு அரசு வழங்கும் ஈட்டுத்தொகை ரூ.1100 வழங்கப்படும். ஓரிரு நிமிடங்களில் மயக்க மருந்து கொடுக்கப்படாமல் அறுவை சிகிச்சை செய்யப்படும். அறுவை சிகிச்சைக்கு பின்பு மருத்துவமனையில் தங்கவேண்டியதில்லை. சிகிச்சை முடிந்த பிறகு வீட்டிற்க்கு செல்லலாம். கத்தியின்றி. ரத்தசேதமின்றி, தையல், தழும்புமின்றி செய்யப்படும் இந்த அறுவை சிகிச்சையால் பின் விளைவுகள் ஏதும் இருக்காது. எனவே, விருப்பமுள்ள ஆண்கள் இந்த அறுவை சிகிச்சை செய்துக்கொள்ளலாம் என்று துணை இயக்குநர் டாக்டர். கோபிநாத் எம்.எஸ். குடும்பநலம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

<u>முகாம் நடைபெறும் இடம் மற்றும் நாள் :</u>

அரசு மருத்துவமனை, திருவெறும்பூர் - துவாக்குடி, திருச்சிராப்பள்ளி – 19.03.2020

BHEL மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி – 19.03.2020

**செய்தி வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**